**ஆசிரியர்கள் /ஆசிரியரல்லாதோர் கடவுச்சீட்டு பெற / புதுப்பிக்க தடையின்மைச் சான்று தேவையில்லை. முன் நகல் அளித்தல் போதுமானது பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்.**

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள். சென்னை –06
**ந.க.எண் : 9019/ ஆர்2 பிரிவு /இ1/ 2014 நாள் 19–09–2015**

பொருள் : அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் – ஆசிரியர்கள் / ஆசிரியரல்லாதோர் – நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் /ஆசிரியரல்லாதோர் கடவுச்சீட்டு பெற / புதுப்பிக்க தடையின்மைச்சான்று – நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது முன் நகல் அளித்தல் சார்பு

பார்வை :

1) அரசாணை எண். 140 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 21–11–2013
2) இவ்வலுவலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் : 9019/ ஆர்2 பிரிவு இ1/ 2014 நாள் 30–05–2014
3) அரசாணை எண்.71 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை (A) நாள் 02–07–2015

பார்வை (1) இல் காணும் அரசாணையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகளில் விதி 24 A க்கு திருத்தம் வெளியிட்டு கடவுச்சீட்டு பெற / புதுப்பிக்க துறைத் தலைவருக்கு தொகுதி B,C மற்றும் D பிரிவின் கீழ் பணிபுரியம் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை திருத்தி B,C மற்றும் D பிரிவின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு நியமன அலுவலரின் கடவுச் சீட்டு பெற /புதுப்பிக்க தடையின்மை சான்று வழங்கலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையின் அடிப்படையில் பார்வை (2) ல் காணும் இவ்வலுக செயல்முறைகள் வாயிலாக அனைத்து அலுவலகங்கள் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கும் சுற்றிக்கை அனுப்பப்பட்டது.

பார்வை (3) ல் காணும் அரசாணையில் அயல்நாட்டு அலுவலக அமைச்சகத்தால் (Ministry of External Affairs) கடவுச் சீட்டு பெற / புதுப்பிக்க தற்போது உள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்தும் பொருட்டு அனைத்து அரசு பணியாளர்கள் / பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் கடவுச் சீட்டு பெற / புதுப்பிக்க அடையாளச் சான்றிதழ் /தடையின்மைச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு Annexure N முன் நகல் படிவத்தை சம்பந்தப்பட்ட அதிகாரம் படைத்த அலுவலர் / நியமன அலுவலருக்கு அனுப்பிவிட்டு கடவுச் சீட்டு அலுவலருக்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கடவுச்சீட்டு பெற / புதுப்பிக்க Annexure N முன் நகல் படிவம் பூர்த்தி செய்து கடவுச் சீட்டு அலுவலருக்கு விண்ணப்பிக்கும் போது சம்பந்தப்பட்ட அதிகாரம் படைத்த அலுவலர்/ நியம அலுவலருக்கு அனுப்பி விட்டு கடவுச் சீட்டு அலுவலருக்கு விண்ணப்பிக்குமாறு அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது சார்பாக தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்துப்பள்ளிகள் /அலுவலகங்களுக்கு சுற்றாரிக்கை அனுப்பி / உரிய பதிவேடுகளில் பராமாரிக்குமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / ஆசிரியரால்லாத பணியாளர்கள் அனைவரும் வெளிநாடு செல்ல துறைத்தலைவரான பள்ளிக்கல்வி இயக்குநரின் அனுமதியின் அடிப்படையில் மட்டுமே விடுப்பு அனுமதிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கருத்துக்கள் பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டு உரிய துறை அனுமதி பெறப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநருக்காக